8th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது பாதுகாப்புக் கைதிகள் பற்றிய விதிகள் இருக்கின்றன. அவற்றை மாற்றி அமைப்பதாக உத்தேசமும் இல்லை. அதற்கு நிமித்தமும் இல்லை.

* 211 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) the list of papers against which prosecutions have been launched under D.I.R. in connection with anti-Hindi agitation; and

(*b*) the present stage of the prosecutions?

The HON. SRI M. BHAKTAVATSALAM:

(1)	Malai Murasu (Madras, Tirunelveli, Tiruchirappalli, Coimbatore, Madurai and Salem Editions).	Daily.
(2)	Dina Thanthi	Do.
(3)	Murasoli	Do.
(4)	Malai Mani	Weekly.
(5)	Swadesamitran	Daily.
(6)	Tamil Nad (Madurai)	Do.
(7)	Thenmozhi (Cuddalore)	Monthly.

Cases against all these papers except 'Thenmozhi' are pending trial in the Court.

திரு. கே. ஏ. மதியழகன்: சார், பாராளுமன்றத்திலே, சமீபத்திலே உள்துறை அமைச்சர் பேசும்போது, பத்திரிகைகள் பேரில் வழக்குத் தொடருவதற்கு முன் ஆல்-இந்தியா பத்திரிகையாளர் சம்மேளனத்தைக் கலந்து கொள்ளாமல் மாநில சர்க்கார் வழக்குகள் போடக் கூடாது, அப்படிப் போடப்பட்ட கேசுகளை வாபஸ் பெறவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த மாநிலத்திலே போடப்பட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் பெற முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பார்லிமெண்டில் என்ன கூறப்படுகிறது, என்ன கூறப்படவில்லை என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இந்த வழக்குகளை வாபஸ் செய்ய எந்த நிமித்தமும் இல்லை.

திரு. செ. மாதவன்: பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பல பத்திரிகைகள் மேல் வழக்குகள் போடப் பட்டிருக்கின்றன. இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக எடுக்கப் பட்ட வழக்குகள் இன்னும் பெண்டிங்காக இருக்கின்றன. பின்னால் போடப் பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டுக்கும் வேறுபாடு ஏன்? இவற்றையும் வாபஸ் வாங்க உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தி எதிர்ப்புச் சம்பந்தமாக போடப்பட்ட வழக்குகள் பற்றியது ஒரு விஷயம். பின்னால் எடுக்கப்பட்ட வழக்குகள் வேறு விஷயம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

[8th March 1966

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், இந்தப் பத்திரிகைகளின் பேரில் தொடர்ந்திருக்கும் கேசுகளை வாபஸ் வாங்குவது பற்றி முதல் அமைச்சர் பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து, சில கண்டிஷன்களைப் போட்டு வாபஸ் பெறுவதற்கு, அவர்கள் அவற்றை ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே. வாபஸ் பெறவில்லை என்று முன்னால் சொன்னார்கள். இப்போழுது நிலைமை எப்படி யிருக்கிறது? அண்மையிலே பாராளுமன்றத்திலே குறிப்பிட்டது போல பத்திரிகைகளுக்காவது சுதந்திரம் கொடுக்க, இந்த வழக்குகளை வாபஸ் வாங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பத்திரிகைகளுக்கு சுதந்திரம் மறுக்கப்படவில்லை. ஆனால், பலாத்காரத்தை தூண்டும் சுதந்திரம் கோரினால் அதை எற்றுக்கொள்ள முடியாது. இப்பொழுது இருக்கும் நிலையில் எந்த மாறுதலும் கிடையாது. வழக்குத் தொடரப்பட்டுள்ள பத்திரிகைகள் ஹைக்கோர்ட்டுக்குச் சென்று, "ஸ்டே" ஏற்பட்டிருக்கிறது. இந்த வழக்குகள் ஹைக்கோர்ட்டில் இருக்கின்றன.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து முதல் அமைச்சர் என்ன உறுதிமொழி கேட்டார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப் பற்றியெல்லாம் விளக்க முடியாது. இந்த வழக்குகள் கோர்ட்டில் இருக்கின்றன, ஹைக்கோர்ட்டில் இருக்கின்றன. நான் கேட்பது எல்லாம், அந்த அந்த பத்திரிகையாளர்களுக்குத் தெரியும்.

திரு. மு. கருணாநிதி: வழக்குகள் போடப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களில் சிலர் கைது செய்யப்பட்டார்கள்; மற்றவர்கள் செய்யப்படவில்லை. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்ய வேண்டாம் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. சில இடங்களில் கைது செய்யப்பட்டதாக நினைத்து இதைப் பெரிது செய்திருக்கலாம்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION.

RISE IN PRICE OF FOODSTUFFS IN HOTELS IN MADRAS CITY.

MR. SPEAKER : The adjournment motion given notice of by Sri K. A. Mathialagan is too vague and too general. Unless it is given for publicity, I am not inclined to take it up at all in the House.

SRI K. A. MATHIALAGAN : The Hon. Speaker must be kind enough to allow me to explain how a *prima facie* case exists. I will confine my remarks to explaining how a *prima facie* case exists.